Tiaano®
Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2008 Certified

#48 Noothancharv. Madambakkam. Chennai – 126. India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

# "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2014-2015

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 6.25% ↑
- **Products for ...**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS


- **Customers...**
  - Up to Jul. 14 : 774 Nos.
  - Up to Jun. 14 : 769 Nos.
- **Performance Jul. 14 ...**
  - Turnover growth : 11.41%
  - Employment growth : 1.89%
  - 100% Attendance : 24.05%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika Jeyakummar

## OUR FORMULATIONS

- Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil – Water Disinfection Equipments.
- Fib Tec Composite – FRP/ GRP Mandrels & Tanks
- HydroGen Go Green – HHO Generators
- Titanictrade – Portal for Exotic Metals
- – Tiaano Vidyashrm (CBSE Pattern School)




## உதவி!

பார்வைக்கு நன்றாகத் தோற்றமளிக்கும் ஒருவர் நம்மிடம் உதவி கேட்டால் நாம் பெரும்பாலும் உடனே செய்ய முயல்வோம். அதே நேரம் வெளிப்பார்வைக்கு மோசமாக இருக்கும் ஒருவர் உதவி கேட்டால், நிறையபேர் அதைப் பொருட்படுத்த மாட்டார்கள்.

நீங்கள் பார்த்திருக்கலாம், இல்லாதவர்கள் யாசகம் கேட்கும் போது, "இல்லை" என்ற பதிலைக்கூட வாய்மொழியாகச் சொல்ல சிலர் தயங்கி, முகத்தைத் திருப்பிக்கொள்வார்கள், அல்லது அப்பால் நகர்ந்து விடுவார்கள், மற்றவர்களிடம் யாசித்து வாழும் நிலையில் அவர்கள் இருந்தாலும் அவர்களும் மனிதர்கள்தானே! முடிந்தால் நாம் உதவி செய்யலாம், இல்லையென்றால் அதை மரியாதையாகச் சொல்லிவிடலாம்.

ஒரு தலைவர் இருந்தார், அவர் மிகவும் செல்வாக்கு மிக்கவர். ஒரு முறை அவர் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவருடனே அவரது நண்பர்களும், உதவியாளர்களும் வந்தார்கள்.

ஒரு சிறிய ரயில் நிலையத்தில் வண்டி நின்றது. ஒரு ஏழை மூதாட்டி தலைவர் இருந்த அந்த ரயில் பெட்டியில் ஏறினார். அவர் மிகவும் எளிய ஆடைகளை அணிந்திருந்தார். அந்த மூதாட்டிக்கு நேராக நிற்பதற்கான சக்திகூட இல்லை. ஆனால், தலைவர் இருப்பதால் அந்தப் பெட்டியில் நல்ல கூட்டம் இருந்தது. மூதாட்டி அமர்வதற்கு அங்கே ஒரு இருக்கைகூட காலியாக இல்லை. தான் எழுந்து அவர்களுக்கு இருக்கை கொடுக்கவும் அங்கே யாரும் தயாராக இல்லை. அங்கிருந்த அனைவரும் மூதாட்டியைக் கண்டுகொள்ளாததுபோல இருந்தார்கள்.

தலைவர் அமர்ந்திருக்கும் இடத்திற்கு அருகே மூதாட்டி வந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் தலைவர் எழுந்தார், மூதாட்டியின் கைப்பிடித்து தான் அமர்ந்திருந்த இடத்தில் அமரவைத்தார். மூதாட்டியும் வசதியாக அமர்ந்துகொண்டார். தலைவர் நின்று கொண்டிருப்பதைக் கண்ட அவரது நண்பர்களும், உதவியாளர்களும் எழுந்து தலைவருக்கு இடம் கொடுக்க முன்வந்தார்கள்.

அப்போது தலைவர் அவர்களிடம் உறுதியாகச் சொன்னார்: "நன்றி! அந்த மூதாட்டிக்குக் கொடுக்க முடியாத இருக்கை எனக்கு வேண்டாம். நாம் மற்றவருக்கு உதவி செய்யும்போது நம் மனதில் சில எண்ணங்கள் தோன்றலாம், நம் உதவியை பெறுபவர் யார்? அவர் ஏழையா பணக்காரரா? அவர் அழகானவரா இல்லையா? அவர் என்ன பணி புரிகிறார்? என்றெல்லாம் நமக்கு எண்ணத்தோன்றலாம். இது போன்ற சிந்தனைகளுக்கு இடம் கொடுக்காமல், உதவி கோரும் எவரையும், உதவி செய்வதற்கான வாய்ப்பை நமக்குக் கொடுத்து உதவுபவராகவே நாம் கருத வேண்டும்.

Compiled By : Ms. P.E. Nancy
Director – Admin

---

### Life Is Like A Book

Some chapters are sad, Some are happy and Some are exciting,
But if you never turn the page,
You will never know what the next chapter has in store for you.

## FUNCTIONAL WISHES



**Thiru Onam**
**07th SEPTEMBER**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel: 22294565 |
| | : M/s. Jeya Clinic |
| | Tel: 098408 73107 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!

**Mr. C. Baskaran** **01st Sep.**
Purchase

**Mr. D. Karunakaran** **01st Sep.**
Production (Fib Tec)

**Mr. K. Manivannan** **04th Sep.**
Marketing

**Mr. V. Gokula Krishnan** **06th Sep.**
Production (Fib Tec)



**Mr. J.J. Jeyakumar Martin** **09th Sep.**
CFO (Finance)

**Mr. M. Chinna Thambi** **16th Sep.**
Coating

**Mr. K. Suresh kumar** **19th Sep.**
MSE

**Mr. S. Dinoy** **29th Sep.**
Coating

**Best Wishes from Tiaano Employees**

## கான்ஃபிடன்ஸ் கார்னர்

அந்த துறவி மலைச்சிகரமொன்றில் ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருந்தார். சில நோய்க்கிருமிகள் கூட்டம் கூட்டமாக நகரம் நோக்கி நகர்வதை உணர்ந்து அவற்றை அழைத்தார். "விதியின் ஏவலால் நகரில் பரவப்போகிறோம். நூறு பேரை மட்டுமே கொல்வோம்." என்று வாக்களித்து விட்டு நகர்ந்தன. அடுத்த நாள் ஐந்நூறு பேர் இறந்திருக்கிறார்கள். நோய்க்கிருமிகள் திரும்பிய போது அந்தத் துறவி அழைத்துக் கேட்டார். அவை கூறின, "நாங்கள் கொன்றது நூறு பேர்களைத் தான் நானூறு பேர் அச்சத்துடன் இறந்திருப்பார்கள்" என்றது.

அச்சம் பெரிய நோய்க்கிருமி
அச்சம் அகற்றினால் ஆயுள் கூடும்!

—கான்ஃபிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

### எதையும் உடனடியாக அடைய முடியாது. அப்படி ஒரு வேளை அடைந்தாலும் அது நீண்ட நாள் நீடித்திருக்காது

ஒரு கிராமத்தில் ஞானி ஒருவர் இளைஞர்களுக்கு கல்வி போதித்து வந்தார். அவர் இலக்கு மதிப்பெண்களோ தர நிர்ணயமோ அல்ல. முழுமையான கற்றல் மட்டுமே... எனவே நிதானமாகவும் அதே சமயம் சீடர்கள் மனதில் நன்கு பதியுமாறும், அவர் சொல்லிக் கொடுத்தார். ஆனால் குருவின் இந்த "வேகம்" மாணவர்களில் ஒருவனுக்குப் பிடிக்கவில்லை. ஒரே சமயத்தில் எல்லாவற்றையும் சொல்லிக் கொடுப்பதை விட்டு விட்டு மெதுவாக நாள் கடத்திக் கொண்டே இருக்கிறாரே" என்று குற்றம் சாட்டினான்.

விஷயத்தைக் கேள்விப்பட்ட ஞானி அந்த மாணவனை அழைத்தார். பக்கத்திலிருந்த ஒரு பெரிய விறகுக் கட்டைக் காண்பித்து "அதைத் தூக்கி வெளியே கொண்டு போய் வை" என்றார். விறகுக் கட்டைத் தூக்க முயன்ற மாணவன், அதன் கனம் தாங்காமல் தடுமாறி விழுந்தான். எழுந்து கையைத் தட்டிக் கொண்டு, "தூக்க முடியவில்லை குருவே... மிகவும் கனமாக உள்ளது" என்று தன் தோல்வியை ஒப்புக் கொண்டான்.

"சரி... அந்தக் கட்டைப் பிரித்து விறகுகளைக் கொஞ்சம் கொஞ்சமாய் கொண்டு போய் வை" என்றார் ஞானி. அட... நான்கைந்து முறை எடுத்து வைத்ததில், விறகுகள் விரைவில் இடம்பெயர்ந்தன! "கண்ணா... உனக்குக் கற்பிப்பதும் இப்படித்தான். ஒரேயடியாக உன் மூளைக்குள் திணித்தால் நீ திணறி விழுந்துவிடுவாய். கொஞ்சம் கொஞ்சமாக அதே சமயம் முழுமையாகக் கற்றுக் கொண்டாயானால் அது நிரந்தரமாக உன் மனதில் தங்கிவிடும்.. நீ கற்ற கல்வி தரமாகவும் இருக்கும்" என்று விளக்கினார் ஞானி. மாணவனுக்கு மிக நல்ல பாடமாக அது அமைந்தது! தொடர்ந்து ஞானி இப்படிச் சொன்னார்...

நீங்கள் எல்லோரும் இப்போது படித்துக் கொண்டிருக்கின்றீர்கள். படிப்பது சுகமானதா? சுமையானதா? என்ற ஒரு கேள்வி கேட்டால் சுமையாக இருக்கிறது என்றுதான் பலரும் சொல்வீர்கள். ஆனால் படிப்பதை சுகமாக மாற்றிக் கொள்ளலாம் என்பதற்கு ஒரு குட்டிக் கதை சொல்கிறேன்...

ஓர் அழகான ஊர். அந்த ஊரில் உள்ள ஓர் இளைஞன் நல்ல கனமாக வளர்ந்த ஒரு பசுமாட்டை எந்தச் சிரமமுமின்றி தன் தோள் மேல் போட்டு கொண்டு ஊரைச் சுற்றி வந்தான். ஊரே அவனை பிரமிப்புடன்

## தெரிந்து கொள்வோம்

**நமது உடலில் ஒரு நாளில் நடைபெறும் சில செயல்களை அறிவோம்...**

- ~ இதயம் ஒரு லட்சம் தடவைகள் துடிக்கிறது.
- ~ நுரையீரல்கள் 23ஆயிரத்து 40தடவைகள் சுவாசிக்கின்றன.
- ~ 13ஆயிரத்து 670லிட்டர் காற்று உள் இழுக்கப்படுகிறது.
- ~ முடி 0.42 செ.மீ. நீளம் வளர்கிறது.
- ~ வாய் 4ஆயிரத்து 800வார்த்தைகள் பேசுகிறது.
- ~ 7லட்சம் மூளை அணுக்கள் இயங்குகின்றன.
- ~ நமது இரத்தம் சுமார் 3ஆயிரம் கி.மீ. பயணம் செய்கிறது.
- ~ நமது உடலில் ஓடும் ஒவ்வொரு துளி இரத்தமும் ஒரு நாளைக்கு 300 முறை வடிகட்டப்படுகிறது.

### Indian Cities and their nicknames:

* Pink City - Jaipur (Rajastan)
* Garden City - Bangalore (Karnataka)
* Diamond City - Surat (Gujarat)
* Egg City - Namakkal (Tamilnadu)
* Lake City - Udaipur (Rajastan)
* Sun City - Jodhpur (Rajastan)
* City of Palaces - Kolkata (West Bengal)
* Bangle City - Hyderabad (Andra Pradesh)
* Golden City - Jaisalmer (Rajastan)
* City of Dawn - Auroville (Pondichery)
* White City - Udaipur (Rajastan)
* City of Golden Temple - Amritsar (Punjab)
* Twin Cities - Hyderabad and Secundarabad (Andhra pradesh)
* Pearl City - Tuticorin (Tamil Nadu)
* Weavers city - Panipat (Haryana)
* Temple City - Bhuvaneswar (Orissa)
* Sandal Wood City - Mysore (Karnataka)
* City of Blood - Tezpur (Assam)
* Orange City - Nagpur (Maharashtra)
* City of seven Islands - Mumbai (Maharashtra.

Collected from Internet

பார்த்தது. நல்ல பலசாலி என்றது. எப்படி உன்னால் இவ்வளவு பெரிய மாட்டைத் தூக்கிச் சுமக்க முடிகிறது என்று பலரும் கேட்டனர். ரொம்பவும் சுலபம் என்றான் அவன். எப்படி?

"இந்தப் பசு கன்றுக்குட்டியாக இருந்த நாளிலிருந்து தினம் தினம் தூக்கிச் சுமந்து கொஞ்சுவேன். அதனோடு விளையாடுவேன். அதுவே பழகிவிட்டது. இப்படி தினம் தூக்கிப் பழகியதால் அதன் கனம் எனக்குப் பெரியதாகத் தெரியவில்லை, என்றான்.

பாடம் படிப்பதும் இப்படித்தான். அன்றாடப் பாடங்களை அன்றாடம் படித்து விட்டால் எவ்வளவு கனம் கூடினாலும் அது சுமையாகத் தெரியாது. சுகமாகத் தெரியும். அத்துடன் ஈடுபாடும் சாதிக்க வேண்டும் என்ற தாகமும் இருக்க வேண்டும். ஈடுபாடு என்பது தனித்து திகழ்வது அல்ல. எல்லாவற்றின் மீதும் அக்கறை கொள்பவர்களுக்குத்தான் உழைப்பில் ஈடுபாடு பிறக்கும். இது ஏதோ படிப்பதற்காக உங்களுக்கு சொல்லப்பட்ட கதை அல்ல. படித்த பின்னும் உங்களுக்கு உதவும் பாடம்," என்றார்.

Compiled By : Mr. K. Manivannan
Marketing

### மகனின் பாசம்

ஒரு அப்பாவும், 4 வயது மகனும் அவர்களுடைய புதிய காரை துடைத்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது சிறுவன் ஒரு சிறிய கல்லை எடுத்து காரின் கதவு பக்கத்தில் சுரண்டி கொண்டிருந்தான். சத்தத்தை கேட்ட அப்பாவுக்கு கோபம் தலைக்கேறியது.

கடுப்பில் மகனுடைய கையைப் பிடித்து, நான்கு முறை உள்ளங்கையில் விளாசிவிட்டார். அப்பொழுது தான் கவனித்தார் அவர் அடித்தது ஸ்பேனரை கொண்டு என்பதை. வலியில் துடித்த மகனை மருத்துவ—மனைக்கு தூக்கிக்கொண்டு ஓடினார். பல எலும்புகள் முறிந்து விட்டதால் இனி விரல்களை குணமாக்கமுடியாது என்று மருத்துவர்கள் கைவிரித்தனர். மகன் வலி நிறைந்த கண்களுடன் அப்பாவை பார்த்து "அப்பா...என்னோட விரலுங்க திரும்ப வளர்ந்திடும் இல்லப்பா?" என்று கேட்டவுடன், கண்ணீருடன் மவுனமாக வெளியே வந்தார்.

வெளியே நின்றிருந்த காரை பல தடவைகள் எட்டி எட்டி உதைத்தார். கண்ணீருடன் தலையில் கையை வைத்துக்கொண்டு காரின் முன்பு உட்கார்ந்துவிட்டார். அப்பொழுது தான் அந்த கீரல்களை கவனித்தார் என்ன எழுதியிருக்கிறது என்று... அந்த வாசகம் "ஐ லைக் யூ அப்பா". மனிதர்களை பயன்படுத்துகிறோம்! பொருட்களை நேசிக்கிறோம்!! எப்பொழுதுதான் மனிதனை நேசித்து, பொருட்களை பயன்படுத்த போகின்றோமோ?

Collected from Internet

### நம்பித்தான் ஆகவேண்டும்

### 5S (தொடர்ச்சி XXXII)

**ஒரு கப் செய்டன்**

சில வருஷங்களுக்கு முன், காபி பார் (Coffe Bar) என்று ஒரு புது சமாசாரம் நம் நாட்டுக்கு வந்தது.

அதுவரை ஃபில்டர் காபி, இன்ஸ்டன்ட் காபி என்று இரண்டு வகைகளை மட்டுமே அறிந்திருந்த நம்மவர்கள், கப்புச்சினோ, மேகாக்கா, ஃப்ராப்பே

## கவிதைகள்

### Opinion

" Opinions are like Hand Watches,
Everyone's watch shows different time.
But
Everyone believe that their time is correct…!"

Compiled By : Mr. M. Siva Kumar
Marketing(Fib Tec)

### கடமை!

கற்க வைப்பது பெற்றோர் கடமை,
கற்று சம்பாதிப்பது பிள்ளைகள் கடமை.
நல்ல உணவை ஊட்டுவது பெற்றோர் கடமை,
அதனை கடை பிடிப்பது பிள்ளைகள் கடமை.
மேலான குணங்களை கடை பிடிப்பது பெற்றோர் கடமை!

Compiled By : Mrs. C. Bavani
Administration

### A Life In Colour

The Pink of your cheeks, when the cold wind bites.
The intricacy of your iris against the blank of the White.
The Blue of a mood, that is saddened and dull.
The golden jubilation of a cup half full.
The rainbow of joy.
The darkness of sorrow.
The Green eye of the monster who consumes your todays and tomorrows.
The silver of wisdom:
The Green shoots that thrive.
Embrace every colour
For they prove we're alive.

Compiled By : Miss. T. Regi
Facilitation

## சிந்தனைக்கு

அடுத்தவனின் பாதையைப் பின்பற்றாதே. ஏனெனில் அது அவனுடைய பாதை, உன்னுடையது அல்ல. உன்னுடைய பாதையைக் கண்டுபிடித்து விட்டாயானால், அதன்பிறகு நீ செய்ய வேண்டியது எதுவும் இல்லை; கைகளைக் குவித்த வண்ணம் சரணடைந்துவிடு. பாதையின் வேகமே உன்னை உனது லட்சியத்தில் சேர்த்து விடும்.

Compiled By : Mrs. C. Thanga Priya
Purchase

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

என்று வாயில் நுழையாத பெயர்களோடு சூடாகவும் குளிர்ச்சியாகவும் தினுசு தினுசாக இந்த கடைகளில் மின்னிய காபிகளைப் பார்த்து மலைத்து போனார்கள்.

அவர்களை வாயடைக்க வைத்த இன்னொரு விஷயம், இந்த காபிகளின் விலை, ஐந்து ரூபாய், மிஞ்சிப்போனால் ஆறு ரூபாய்க்கு உசத்தியான டிகிரி காபியே குடித்து சப்புக் கொட்டிவிடலாம் என்று நினைத்துக் கொண்டிருந்த இந்தியர்களால், முப்பது ரூபாய், ஐம்பது ரூபாய், ஏன் நூறு ரூபாய்க்குக் கூட ஒரு கப் காபி கிடைக்கிறது என்பதை நம்ப முடியவில்லை, ஏற்கவும் முடியவில்லை.

ஆனால், காபி பார்களை அறிமுகப்படுத்தியவர்கள், அதைப்பற்றிக் கவலைப்படவில்லை, ஏனெனில், அவர்களுடைய இலக்கு, காசை எண்ணி செலவு செய்கிற நடுத்தர வயதினர் அல்ல. மாணவர்கள், புதிதாக சம்பாதிக்க ஆரம்பித்திருக்கும் இளைஞர்கள், இளைஞிகள் ஆகியோரை மட்டும் நம்பி, ஏகப்பட்ட முதலீட்டில் இந்த காபிக்கடைகள் அமைக்கப்பட்டன.

இதற்கேற்ப, இந்த கடைகளில் வண்ணமயமான அலங்காரங்கள், இதமான இசை, நெடுநேரம் உட்கார்ந்து பேசுவதற்கு வசதியான நாற்காலிகள், கண்ணுக்கு, உடம்புக்குக் குளிச்சியான சூழல் என்று எல்லாமே பார்த்துப் பார்த்து அமைக்கப்பட்டது. ஆகவே, இளைஞர்கள் தங்கள் நண்பர்களோடு அதிக நேரம் செலவிடுவதற்கு இந்தக் கடைகளைத் தேடி வந்தார்கள்.

காபி பார்களின் விற்பனைத் தந்திரங்களை விவரிப்பது இந்த புத்தகத்தின் நோக்கம் அல்ல. என்றாலும், அவர்களை இங்கே ஏன் உதாரணம் காட்டுகிறோம் என்றால், இருக்கிற கொஞ்சூண்டு இடத்தை எப்படி மிகச் சிறப்பாகப் பயன்படுத்துவது என்பதில், காபி பார்களிடம்தான் நாம் எல்லாரும் பாடம் படிக்கவேண்டும்.

உதாரணமாக, ஒரு நவீன காபி பாருக்குள் நுழைந்து பார்ப்போம் வாருங்கள்.

மிகச் சில பெரிய கடைகளைத்தவிர, பெரும்பாலான காபி பார்கள் சுமார் எழுநூற்றைம்பது மிஞ்சிப்போனால் ஆயிரம் சதுர அடி பரப்பில் தான் அமைக்கப்படுகின்றன. நம் ஊர் உடுப்பி ஹோட்டல்கள்கூட, இதை காட்டிலும் விஸ்தாரமாக இருக்கும்.

தொடரும்…

### Electrolyzer for Ballast Water Treatment

